**சுருக்கம்**

கோவிட்-19 – மயான பணியாளர்களை முன்களப் பணியாளர்களாக அறிவித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் (ப்பி1) துறை**

அரசாணை(நிலை) எண்.430

நாள்: 05.10.2021
பிலவ, புரட்டாசி – 19
திருவள்ளுவர் ஆண்டு 2052
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண். 252, மக்கள் நல்வாழ்வு (ம) குடும்பநலத் (ப்பி1)துறை, நாள் 22.05.2021.
2. அரசாணை (நிலை) எண். 258, மக்கள் நல்வாழ்வு (ம) குடும்பநலத் (ப்பி1)துறை, நாள் 31.05.2021

*****

**ஆணை:**

மத்திய அரசு முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி வழங்குவதற்காக, மத்திய மாநில அரசின் காவல் துறையில் பணியாற்றும் பணியாளர்கள், முப்படை வீரர்கள், ஊர்க் காவல்படை பணியாளர்கள், சிறைச்சாலை பணியாளர்கள், பேரிடர் மேலாண்மையில் ஈடுபடும் தன்னார்வலர்கள், கொரோனா கட்டுப்பாடு பகுதிகளில் பணியாற்றும் நகராட்சி / வருவாய் துறை ஊழியர்கள் ஆகியோரை முன்களப் பணியாளர்களாக அறிவித்துள்ளது.

2. மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், முக்கிய தொழிற்சாலைகள், தனியார் நிறுவனங்கள், தங்கும் விடுதிகள் (Hotels), உணவகங்களில் (Restaurants) பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் கட்டடத் தொழிலாளர்கள், வெளி மாநில தொழிலாளர்கள், அனைத்து மார்க்கெட் தொழிலாளர்கள், சில்லறை விற்பனைக் கடை வியாபாரிகள், மாநில போக்குவரத்துக்கழக ஊழியர்கள், அனைத்து அரசு ஊழியர்கள், அனைத்து பள்ளி, கல்லூரி ஆசிரியர்கள், அனைத்து ஆட்டோ, டாக்ஸி ஓட்டுநர்கள், ஊடகத்துறை பணியாளர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் அத்தியாவசிய பணிகளில் ஈடுபட்டு வரும் 18 முதல் 45 வயது வரை உள்ள நபர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி இலவசமாக வழங்க ஆணையிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

3. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், பத்திரிக்கை மற்றும் ஊடகங்களில் பணியாற்றி வரும், அங்கீகரிக்கப்பட்ட பத்திரிக்கை மற்றும் ஊடகங்களில் பணியாற்றி வரும் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிக்கையாளர்கள்,

புகைப்படம் மற்றும் ஒளிப்பதிவு பணியாளர்கள் (Recognized Journalists, Photographers and Camera Persons) மற்றும் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட Accreditation Card and Press pass Holders ஆகியவர்கள் முன்களப் பணியாளர்களாக அறிவிக்கப்பட்டு பல்வேறு சலுகைகள் வழங்கி ஆணையிடப்பட்டது.

4. தற்போது, ஊரக வளர்ச்சி, உள்ளாட்சி, பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் கொரோனா–19 பெருந்தொற்று காலத்தில், தங்களை முழுமையாக ஈடுபடுத்தி பணிபுரிந்து வரும் மயான பணியாளர்களின் உன்னதமான பணியை அங்கீகரிக்கும் வகையிலும், மேலும் அவர்களுக்கு உரிய அங்கீகாரம் மற்றும் சலுகைகள் கிடைக்கும் வகையிலும் அவர்களை முன்களப் பணியாளர்களாக அறிவித்து, அவர்களுக்கு கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கி ஆணையிடப்படுகிறது :–

அ) மத்திய அரசின் ஆணைப்படி மயான பணியாளர்கள் மத்திய அரசின் முன் களப் பணியாளர்கள் பட்டியலில் இல்லாவிடினும் 18 வயதிற்கு மேல் உள்ளவர்களுக்கு தடுப்பூசி போடும் போது, தமிழ்நாடு அரசு, மேற்குறிப்பிட்ட பணியாளர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி வழங்கப்படும்.

ஆ) கொரோனா நோய்த் தொற்றின் காரணமாக, உள்ளாட்சி, பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் கொரோனா–19 பெருந்தொற்று காலத்தில், தங்களை முழுமையாக ஈடுபடுத்தி பணிபுரிந்து வரும் மயான பணியாளர்கள் இறக்கும் நேர்வுகளில், அவர்களின் குடும்பங்களுக்கு சம்பந்தப்பட்ட துறை வாயிலாக ரூபாய் 10 இலட்சம் நிவாரணம் வழங்கப்படும்.

5. இவ்வரசாணை அலுவல் சாராக் குறிப்பு எண்.2082/நிதி/ப/2021 நாள்: 01.07.2021–இல் நிதித் துறையின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**//ஆளுநரின் ஆணைப்படி//**

**ஜெ.ராதாகிருஷ்ணன்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**பெறுநர்**

கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர், வருவாய் நிர்வாகம் (ம)
பேரிடர் மேலாண்மைச் துறை, சேப்பாக்கம், சென்னை–600 005.
முதன்மைச் செயலாளர் / ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை–600 003
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை–600 015.
இயக்குநர், பேரூராட்சிகளின் நிர்வாகம், சென்னை – 600 028.
ஆணையர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை – 600 028.
திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதாரத் திட்டம், சென்னை–600 006.
குழும இயக்குநர், தேசிய நலக் குழுமம், சென்னை–600 006.

இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரகம், சென்னை-600 006.
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை - 600 010.
இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, சென்னை-600 006.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம், சென்னை-600 008.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
மாநில கணக்காயர், சென்னை - 600 018.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை - 600 0018.
கருவூல கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை-600 035.
முதல்வர், அனைத்து மருத்துவக் கல்லூரிகள்.
அனைத்து இணை இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரகம்.

**நகல்:**

சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-600 009.
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித் துறை, அமைச்சர் அலுவலகம், சென்னை-600 009.
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை, அமைச்சர் அலுவலகம், சென்னை-600 009.
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை-600 009.
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு மருத்துவம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை-600 009.
தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலாளர், சென்னை-600 009.
கூடுதல் தலைமைச் செயலாளரின் (நிதி) முதன்மை தனிச் செயலாளர், சென்னை-600 009.
நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளரின், முதுநிலை தனிச் செயலர், சென்னை-600 009.
ஊரக வளர்ச்சி (ம) பஞ்சாயத்து ராஜ் துறை முதன்மைச் செயலாளரின், முதுநிலை தனிச் செயலர், சென்னை-600 009.
மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளரின், தனிச் செயலர், சென்னை-600 009.
வருவாய் நிர்வாகம் (ம) பேரிடர் மேலாண்மைச் துறை முதன்மைச் செயலாளரின், தனிச் செயலர், சென்னை-600 009.
நிதி (சுகாதாரம்-2) துறை, சென்னை-600 009.
அனைத்துத் துறைகள், சென்னை-600 009.
மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத் (தகவுப் பிரிவு / அனைத்து பிரிவுகள்) துறை, சென்னை-600 009.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

5/10/21

**பிரிவு அலுவலர்**

5/10/21